**தலைப்பு 273 – புத்தளம் மாவட்ட செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

புத்தளம் மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் புத்தளம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தளம் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6.1 (ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) இந்த அறிக்கையின் பந்திகளில் உள்ளடக்கப்பட்ட 1.6.2 ஆம் பந்தியின் அவதானிப்புக்கள் சம்பந்தமாக முன்னைய ஆண்டில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சுகள் மீளாய்வாண்டிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாதம்பை பிரதேச செயலகத்தின் கீழ் காணப்படுகின்ற உத்தியோகபூர்வ வீடுகள் அமைந்துள்ள காணியின் பெறுமதி ரூபா 3,650,000 காணியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் அப்பெறுமதி மீண்டும் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கீழ் நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருந்தது. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | கட்டிடங்களுடனான காணிகளை கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கீழ் கணக்கீடு செய்யுமாறு அரசாங்க கணக்குகள் திணைக்களத்தால் வழங்கிய ஆலோசனையின் கீழ் நடவடிக்கை எடுக்கும் போது காணிகளின் கீழ் பதியப்பட்ட பெறுமதியை நீக்குவதற்கு தவறியுள்ளது. 2020 ஆம் ஆண்டின் போது அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாதம்பை பிரதேச செயலகத்தின் கீழ் காணப்படுகின்ற வலஹஹேன சேவை இல்லம் அமைந்துள்ள காணியின் பெறுமதியும் மாதம்மை பிரதேச செயலகம் அமைந்துள்ள காணியின் பெறுமதியும் முறையே ரூபா 2,150,000 மற்றும் ரூபா 16,000,000 ஆக ரூபா 18,150,000 மொத்த தொகை நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் ‘‘காணிகளின்’’ கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் அப்பெறுமதி நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கீழும் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | தேசிய இடர் நிவாரண சேவை நிலையம் உள்நாட்டு விவகார அமைச்சு, இடர் முகாமைத்துவ நிலையம் என்பவற்றின் மூலம் வறட்சியால் இன்னல்களுக்கு உள்ளாகிய மக்களுக்கு குடிநீரைப் பகிர்ந்தளிப்பதற்காக வழங்கப்பட்ட உழவு இயந்திரம், பவுசர், லொறி பவுசர் என்பன முறையே 25, 09 மற்றும் 08 ஆக மொத்தம் 42 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த பவுசர்களை மாவட்ட செயலகம் பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிய வாகனங்களைப் பொறுப்பேற்று கணக்கீடு செய்தல் வேண்டும். | புத்தளம் மாவட்ட செயலகம் பொறுப்பேற்றுள்ள அனைத்து வாகனங்களும் 2020 ஆம் ஆண்டளவில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இடர் முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட வாகனங்கள் இதுவரை பொறுப்பேற்கப் பட்டிருக்காததனால் கணக்கீடு செய்ய முடியாதிருந்தது எனத் தெரிவிக்கின்றேன். |
| (ஈ) | மூன்று பிரதேச செயலகங்களில் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் செயற்பட்டு வருகின்ற அரசாங்கத்தின் காணியும் கட்டிடமும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட செயலகத்திற்கும் பிரதேச செயலகங் களுக்கும் சொந்தமான அனைத்து சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | மதிப்பீடு செய்யப்படாததனால் அப்பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு முடியாதுள்ளது. |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தக கீங்கள் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் கீழே தரப்படும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படுதல் வேண்டும். | பேணப்படும். |
| (ஆ) வாகன சம்பவ குறிப்பு புத்தகம் | | |
| நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் வாகன சம்பவ குறிப்பு புத்தகம் நாளது வரையாகப் பேணப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்க வில்லை. | பேணப்படும். |

### 1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | | | |
| 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை | கருவலகஸ்வெவ பிரதேச செயலகத்தின் 89 உத்தியோகத்தர்கள் 2019 ஆம் ஆண்டின் போது விரல் அடையாளமிடும் இயந்திரத்தில் வருகை மற்றும் வெளிச் செல்லலை பதிவு செய்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதி ஏற்பாட்டுப் பணம் கிடைக்காமையின் அடிப்படையில் செயற்பாதிருந்த விரல் அடையாளமிடும் இயந்திரத்தினை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு தாமதமடைந்துள்ளது. நிதி ஏற்பாட்டினைப் பெற்ற பின்னர் விரல் அடையாளமிடும் இயந்திரத்தின் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) அரசாங்க நிதி சுற்றறிக்கை | | | |
| (i) 2015 யூன் 14 ஆந் திகதிய 30/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும், மூன்று பிரதேச செயலகங்களில் 23 சந்தர்ப்பங்களின் போது ரூபா 817,920 மொத்த தொகை சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 30/2015 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உபகட்டுநிதிப் பதிவேட்டினை நாளதுவரையாக்கும் செயற்பாடு இடம்பெறாமையின் காரணமாக இக்குறைபாடு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கின்றேன். மீண்டும் அவ்வாறான குறைபாடு ஏற்படுவதனைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2012 பெப்ரவரி 05 ஆந் திகதிய 2012/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஆனமடுவ பிரதேச செயலகத்தினால் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு வழங்கப்பட்ட 09 ஒப்பந்தங்கள் உப ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள சமூக அமைப்புக்களை கறுப்பு பட்டியலில் சேர்த்தல் வேண்டும். | தன்னார்வ அமைப்புக்களுடன் ஒப்பந்த உடன்படிக்கையில் கையொப்பமிடும் போது உப ஒப்பந்தம் வழங்கப்படாதிருக்க வேண்டும் என்பதற்கு இணங்கி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதுடன் அவ்வாறு உப ஒப்பந்தம் வழங்குதல் பிரதேச செயலாளருக்குத் தெரியப்படுத்தி இடம்பெற்ற நடவடிக்கை அல்லாததனால் அதனைக் கட்டுப்படுத்துதல் சிக்கலானது எனத் தெரிவிக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271∴.2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தியின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க 11 செலவு விடயங்களின் சேமிப்பாகிய ரூபா 31,089,741 சம்பந்தமாக ACA 2(ii) படிவத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணம் சமர்ப்பிக்கப்படவில்லை. | செலவுகள் தொடர்பாக சரியான எதிர்வு கூறல் செய்து வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | கணக்காய்வு ஐய வினாவுடன் இணங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 06 ஆம் பிரிவிலுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க தொடக்க மற்றும் | - மேற்படி - | இணங்கிக்கொள்ளப்பட்டது. |

திருத்திய செலவு மதிப்பீடுகளின் முரண்களை விளக்குவதற்காக ACA 2(iii) படிவம் பூரணப்படுத்தப்பட வேண்டிய போதிலும், உரிய முரண்கள் ரூபா 18,650,800 தொகையான 07 செலவு விடயங்கள் சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டிற்கான கணக்கு குறிப்பு (iii) இன் கீழ் வெளிப்படுத்தப்பட்ட 08 செலவு விடயங்களின் பொறுப்புக்கள் ரூபா 1,466,798 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு திறைசேரி அச்சுப் பிரதி 192 இன் பிரகாரம் பொறுப்பு ரூபா 1,436,609 ஆக இருந்ததனால் வித்தியாசம் ரூபா 30,188 ஆகும். அந்த வித்தியாசத்திற்கான காரணம் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. | வித்தியாசத்தை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொறுப்புக்கள் குறிப்பு (iii) இன் கீழ் வெளிப்படுத்தப்பட்ட பொறுப்புக்களின் பெறுமதி உண்மையாக அலுவலகத்தில் காணப்பட்ட பொறுப்புகளின் அளவு என தயவாகத் தெரிவிக்கின்றேன். சிகாஸ் கணக்கு முறைமையில் உள்ளடக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான தரவுக் கோவையை உட்படுத்தும் போது இடம்பெற்ற சில குறைபாடுகளின் அடிப்படையில் இவ்வித்தியாசம் இடம்பெற்றது. அடுத்து வரும் ஆண்டுகளில் இவ்வாறான வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் வித்தியாசத்திற்கான காரணத்தை விளக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2.3 முற்பணங்கள் வழங்குதலும் தீர்த்து வைத்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மூன்று பிரதேச செயலகங்களில் வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டு 02-13 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலம் கடந்திருந்த மூன்று உத்தியோகத்தர்களின் ரூபா 202,988 கடன் மீதியானது 2019 திசெம்பர் 31 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு ஐய வினாவை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ஆ) | மூன்று பிரதேச செயலகங்களில் மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்ற மூன்று உத்தியோகத்தர்களின் ரூபா 381,629 தொகையான கடன் மீதியானது முற்பண கணக்கு மீதியாகக் காட்டப்பட்டிருந்ததுடன் அவை 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு ஐய வினாவை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (இ) | 30/2008 ஆம் இலக்க 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கையினை மீறி ரூபா 250,000 எல்லையினை மிகைத்து ஆராய்ச்சிக்கட்டு பிரதேச செயலகம் கடன் வழங்கிய சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டது. | அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு ஐய வினாவை ஏற்றுக் கொள்கின்றேன். |

## 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 02 ஆண்டுகளை மிகைத்த காலாவதியான ஐந்து வைப்புக் கணக்கு மீதிகளில் இருந்த ரூபா 58,118,110 பெறுமதி சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் வருமானத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) நாத்தாண்டியா பிரதேச செயலகத்தில் 2019 கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் துன்கந்தாவ மஹகெதரவத்த வீதிக்கு தார் இடுவதற்காக ரூபா 481,144 பணம் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதான வீதியுடன் தொடர்புபட்ட பதிகு தார் இடப்படாது கைவிடப்பட்டிருந்தமை வீதியின் இரு பக்கத்திலும் வடிகாண் முறைமை திட்டமிடப்பட்டிருக்காமை, மதிப்பீட்டின் பிரகாரம் வீதியின் அகலம் 3 மீற்றர்கள் இல்லாத சந்தர்ப்பங்கள் காணப்படல் ஆகிய விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | மதிப்பீட்டின் பிரகாரம் செயற்திட்டம் அமுல்படுத்தப்படுதல் வேண்டும். | தொழில்நுட்ப உத்தியோகத்தரால் மீண்டும் பரீட்சித்து வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு சில இடங்களில் 3 மீற்றர்களுக்கு குறைவான மட்டத்தில் காணப்பட்டமையை ஏற்றுக் கொள்வதுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அளவீட்டு அறிக்கையின் பிரகாரம் உரிய விடயங்களின் குறைவான அகலத்திற்கு மீண்டும் கணிப்பீடு செய்து மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ள ரூபா 20,935 பணம் செயற்திட்டத்தின் நிறுத்தி வைத்தல் பணத்திலிருந்து அறவிடப்பட்டு அரசாங்க வருமானத்திற்கு செலவு |

| | | | |
|---|---|---|---|
| | | | வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான கொடுப்பனவுப் பத்திரத்தின் பிரதியானது பின்னிணைப்பு 02 ஆக இதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக உரிய உத்தியோகத்தரிடம் விடயத்திற்கான விளக்கத்தை விசாரித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மேலும் தெரிவிக்கின்றேன். |
| (ஆ) | 03 பிரதேச செயலகப் பிரிவுகளில் ரூபா 7,126,540 செலவு செய்து 11 வீதிகளை அபிவிருத்தி செய்யும் போது வடிகாண் முறைமையும் தேவையான இடங்களில் மதகுகளும் தயார்ப்படுத்தாது வீதிகளின் மேற்பரப்பு மாத்திரம் மேம்படுத்தப்பட்டதன் காரணமாக மழை நீர் வடிந்தோடுவதற்கு முறைமை இல்லாததனால் செலவு செய்யப்பட்ட பணத்திலிருந்து எதிர்பார்த்த விளைவுகள் கிடைத்திருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் மேம்படுத்தப்பட்ட வீதியின் மேற்பரப்பிற்கு குறுக்காக வடிகாண் வெட்டி மழை நீரை பாய்ச்ச வேண்டி ஏற்பட்டிருந்தது. | முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் மொத்த கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் நிதி ஏற்பாட்டினை வழங்கி சரியான திட்டங்களின் அடிப்படையில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | இப்பிரேரணையானது கிராமத்தவர்கள் மற்றும் பிரதேச அரசியல் முகர்களினால் மேற்கொள்ளப்பட்டதுடன் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடானது உச்சளவு பயன்பாட்டுடன் இச்செயற்திட்டத்தின் குறிப்பிடத்தக்க அளவான வேலைகள் முடிவடைந்துள்ளதுடன் தற்பொழுது இக்கட்டிடம் பயன்படுத்தக்கூடிய மட்டத்தில் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது உரிய ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு இணங்குகின்றேன். |
| (இ) | 02 பிரதேச செயலகப் பிரிவுகளில் ரூபா 11,419,751 செலவு செய்து 05 கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது மொத்த கிரய மதிப்பீட்டினைத் தயாரித்து தேவையான நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக் கொண்டு நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படாததன் | - மேற்படி - | இது ஒரு பகுதி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமாகும். எனவே கிராமத்தவர்கள் மற்றும் அரசியல் முகவர்களின் வேண்டுதல்களின் பிரகாரம் இச்செயற்திட்டத்தை பயன்படுத்தக்கூடிய மட்டத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடிய வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக உரிய நிர்மாணங்கள் பயன்படுத்தக் கூடிய மட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | நிர்மாணத்திற்காக நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டை உச்ச அளவில் பயன்படுத்துவதன் மூலம் இச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டதுடன் தற்பொழுது இந்த விகாரையின் பங்களிப்புடன் அதிக அளவான வேலைகள் முடிவடைந்துள்ளது. எதிர்காலத்தில் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது உரிய தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு இணங்குகின்றேன். |
| (ஈ) | 2019 கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹவெவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள குடாவெவ குளத்திலிருந்து நீர்த் தாவரங்களை அகற்றுவதற்காக ரூபா 1,923,000 தொகையான செய்த வேலைகளின் பெறுமதிக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தும் 2020 சனவரி 04 ஆந் திகதிய கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் குளத்தில் பெரிய பிரதேசத்தில் செல்வீனியா மழைநீர்த் தாவரம் வளர்ந்திருந்ததனால் மேற்கொள்ளப்பட்ட செலவு விளைவற்றதாகியிருந்தது. | செயற்திட்டத்திற்காக அரசாங்கத்தின் பணத்தை செலவு செய்யும் போது உச்சளவு விளைவினை பொது மக்களுக்கு கிடைக்கக் கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 47 ஏக்கர் பரப்பளவானதுடன் உரிய மதிப்பீட்டிற்கு இணங்க 17 ஏக்கர் நீர்த் தாவரங்களை அகற்றுதல் செய்யப்பட வேண்டிய போதிலும் 20 ஏக்கர் அளவான நீர்த்தாவரம் அகற்றப்பட்டிருந்தது. |
| (உ) | மாதம்மை பிரதேச செயலகப் பிரிவில் கல்முருவ தெற்கு குடிநீர் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக | - மேற்படி - | நீர் கொள்ளளவு பரிசோதனையின் அறிக்கையின் மூலம் ஒரு தடவையில் 28,800 லீற்றர் நீரைப் பெற்றுக் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,066,099 பணம் செலவு செய்யப்பட்டதுடன் குழாய்க் கிணற்றில் நீர் கொள்லளவு இல்லாததன் காரணமாக மேற்கூறிய செயற்திட்டம் வெற்றியளிக்காத செயற்திட்டமாக மாறியிருந்தது. | | கொள்ளலாம் எனவும் ஒரு தடவைக்கு நீரை இறைக்கும் காலம் 02 மணித்தியாலங்கள் எனவும் ஒரு நிமிடத்திற்கு 40 லீற்றர்கள் எடுக்க முடியும் எனவும் தெரிவித்து தேசிய வளங்கள் சபையின் மாகாண முகாமையாளரின் (வடமேல்) PM/NW/PUT/2019 – 43/81/82/83 ஆம் இலக்க 2019-12-30 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கிணற்றின் கொள்வனவு தொடர்பான அறிக்கை எனக்கு அனுப்பி வைக்கப்பட்டது. |
| (ஊ) | நாத்தாண்டியா பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 2,768,903 செலவு செய்து 03 விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தும் போது மழைநீர் வடிந்தோடுவதற்கான ஒரு முறைமை திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்படாததனால் அந்த விளையாட்டு மைதானம் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளும் மட்டத்திற்கு மேம்படுத்தப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்தை மதிப்பீடு செய்வதற்கு முன்னர் அனைத்து காரணிகளையும் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு காணப்படுகின்ற சிக்கல்கள் தொடர்பாக இனங்கண்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்பொழுது நன்றாக பரப்பப்பட்டுள்ளதனால் மழைக்காலத்தில் இந்த கிரவல் அடித்துச் செல்லப்படமாட்டாது. எதிர்காலத்தில் கிடைக்கின்ற நிதிஏற்பாட்டின் மூலம் இந்த விளையாட்டு மைதானத்தில் நீர் வடிந்து செல்லும் கால்வாய் முறைமையைத் தயார்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 3.2 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) பெற்றுக் கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வென்னப்புவ பிரதேச செயலகப் பிரிவில் தெற்கு மிரிசன்கொடுவ குளத்தை புனரமைப்புச் செய்வதற்காக | செயற்திட்டத்திற்காக அரசாங்கத்தின் நிதியை செலவு செய்யும் போது | தெற்கு மிரிசன்கொடுவ குளத்திற்கு ரூபா ஒரு மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் |

| | | | |
|---|---|---|---|
| | உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 1,000,000 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன்மூலம் குளத்தில் நீர்த்தாவரங்களை அகற்றுதல் வான்கதவு மற்றும் வழிந்தோடிகளை தயாரித்தல், கால்வாய்களை தயாரித்தல் என்பவற்றிற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் வான்கதவுகளைத் திருத்துதல் மற்றும் கால்வாய்களை தயார்ப்படுத்துதல் முறைப்படியாக இடம்பெற்றிருக்கவில்லை. | உச்சளவு பயன் பொதுமக்களுக்கு கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அதற்காக புத்தளம் உதவி கமநல அபிவிருத்தி அலுவலகத்தினால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2019/10/02 ஆந் திகதி பெறுகை இடம்பெற்றது. அப்போது மழைக்காலம் தாக்கத்தை ஏற்படுத்தியதனால் 2019/12/31 ஆந் திகதிக்கு முன்னர் வான் கதவுகளை திருத்துதலினை மேற்கொள்வதற்கும் கால்வாய்களை முறையாகத் தயார்ப்படுத்துவதற்கும் முடியாதிருந்தது. |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட தெயட்ட கிருல நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நவகத்தேகம நாடக அரங்கினை உரிய முறைப்படி பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு உரிய பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனத்திற்கு ஒப்படைக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செய்யாமையினால் உரிய நாடக அரங்கு விளைவற்று அழிவடைந்து காணப்பட்டது. | - மேற்படி - | நவகத்தேகம நாடக அரங்கு அமைந்துள்ள காணியை பிரதேச செயலகத்தினால் பொறுப்பேற்பதற்கு உரிய திட்ட வரைபடத்தை (உருவரிப் படம்) பெற்றுக் கொள்வதற்காக புத்தளம், சிரேஷ்ட நிலஅளவை அதிகாரி அலுவலகத்திற்கு எனது சம இலக்க 2018-12-04 ஆந் திகதிய கடிதம் அனுப்பப்பட்டதுடன் அது தொடர்பான ‘‘நில அளவைக் கட்டணம் நவகத்தேகம பிரதேச சபையின் மூலம் 2019-10-22 ஆந் திகதி ரூபா 11,500.00 பணம் 450033 ஆம் இலக்க காசோலையின் மூலம் சிரேஷ்ட நில அளவை அதிகாரியின் பெயருக்குச் செலுத்தப்பட்டது. இது சம்பந்தமாக எனது சம இலக்கம் 2020-03-06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சிரேஷ்ட நில அளவை அதிகாரி அலுவலகத்தினால் விசாரிக்கப்பட்டதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | | | அதற்கான நில அளவை வேண்டுதல் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது எனவும் நில அளவை நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் உரிய திட்ட வரைபடத்தின் பிரதியை அனுப்புவதாகவும் சிரேஷ்ட நில அளவை அதிகாரி அலுவலகத்தின் மூலம் 2020-06-03 ஆந் திகதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. உரிய திட்டவரைபட பிரதி கிடைத்ததன் பின்னர் காணியை பொறுப்பேற்பதற்குரிய ஆவணங்களை காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாகத் தெரிவிக்கின்றேன். |
| (இ) | வென்னப்புவ பிரதேச செயலகப் பிரிவில் 2019 கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் த/உல்ஹிடியாவ பெமிரோனியா மாவத்தையிலிருந்து லூசன் பெரோரா மாவத்தை வரை திவென வீதிக்கு தார் பரப்பி அபிவிருத்தி செய்வதற்கு உரிய ஒப்பந்தக்காரருக்கு ரூபா 770,295 செய்த வேலைப் பெறுமதிக்குரிய பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மழை காலத்தில் நீர் வடிந்தோடுவதற்கு வீதிக்கு குறுக்கே கால்வாய் வெட்டியிருந்தன் மூலம் மேற்கூறிய செலவு செய்யப்பட்ட பணம் விளைவற்ற செலவாக இருந்தது. | பொதுமக்களின் பணத்தை செலவு செய்து மேற்கொண்ட அபிவிருத்தி செயற்திட்டங்களின் போது உரிய பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் அவை இடம்பெற்றது என்பதற்கு நிறுவன தலைவர் சான்று செய்தல் வேண்டும். | பிரதேச சபையின் அதிக மழைவீழ்ச்சி காரணமாக உள்ஹிடியாவ பிரதேசத்தில் தனியார் காணிகளில் பல நாட்கள் நீர்தேங்கி நின்றதாலும் நீர் வழிந்தோடுவதற்கு மாற்றுவழி இல்லாததனாலும் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் ஆலோசனையின் பிரகாரம் மேற்கூறிய வீதிக்கு குறுக்கே காண் வெட்டப்பட்டு நீர் வழிந்தோடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதில் உரிய புனரமைப்புக்கள் பிரதேச சபையின் மூலம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். |

## 3.3 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மஹவெவ பிரதேச செயலகத்தில் இரணவில சமதிகம நீர் செயற்திட்டத்திற்காக நீர்ப் பம்பிகளை நிர்மாணிப்பதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் ரூபா 1,996,170 தொகையான மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டில் சூகிதபுரவர நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அதற்காக ரூபா 500,000 நிதிஏற்பாடு மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக மேற்கூறிய செயற்திட்டத்தினை அமுல்படுத்துதல் கைவிடப்பட்டிருந்தது. மதிப்பீட்டின் பிரகாரம் நிதிஏற்பாட்டினை வழங்குதல் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் முறைப்படியான பெறுகை நடைமுறையாக இருந்த போதிலும், அதற்கிணங்க போதியளவு நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாததனால் பிரதேச அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து உச்ச அளவு பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | பிரதேச அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து உச்ச அளவு பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் 30 நலன் பெறுநர்களின் வீடுகளுக்கு மின்சாரத்தை வழங்குவதற்காக ஒரு நலன்பெறுனருக்கு ரூபா 20,000 வீதம் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடமைப்பு உதவிச் செயற்திட்டத்தினை அமுல்படுத்தும் போது ஒரு நலன்பெறுநருக்கு ரூபா 100,000 வீதம் 46 நலன்பெறுநர்களுக்கு 2019 ஆம் அண்டில் ரூபா 4,600,000 உதவிப் பணம் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் நலன்பெறுநர்களைத் தெரிவு செய்யும் நடைமுறையில் இருந்த குறைபாடுகளின் காரணமாக அந்த உதவி தேவைப்படுகின்ற நபர்களை இனங்காணாமையின் காரணமாக அச்செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | 46 வீடமைப்பு உதவி நலன்பெறுநர்களும் வீடுகளை நிர்மாணித்தலை 2019-12-31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்வதற்கு முடியவில்லை எனத் தெரிவித்து உதவிப் பணத்தைப் பெற்றுக்கொள்ளுதல் நிராகரிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சின் திறைசேரி செயலாளரினால் வழங்கப்பட்ட BD/GPS/155/09/01/HA-2019 ஆம் இலக்க 2019-11-20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தற்பொழுது வேலை ஆரம்பிக்கப்படாத அனைத்து செயற்திட்டங்களையும் மீண்டும் தெரிவிக்கும் வரை கைவிடப்பட்டதனால் இச்செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. |
| (இ) | முந்தல் பிரதேச செயலகத்தில் 2019 பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட 33 செயற்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பிரதேச அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து உச்ச அளவு பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |
| (ஈ) | மாதம்பை பிரதேச செயலகப் பிரிவில் 557 சீ தம்பகல்ல மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் சமூக அடிப்படை அமைப்புக்களின் மூலம் அமுல்படுத்தப்பட்ட நீர்ச் செயற்திட்டத்திற்காக 2014, 2015 மற்றும் 2017 ஆம் | செயற்திட்டத்திற்காக அரசாங்கத்தின் பணத்தை செலவு செய்யும் போது உச்சளவு பெறுபேறுகள் மக்களுக்கு கிடைக்கும் வகையில் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |

| | | |
|---|---|---|
| ஆண்டுகளில் ரூபா 2,674,434 பணம் செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இரு தரப்பினர்களுக்குமிடையே ஏற்பட்ட சிக்கல்களின் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை மேற்கூறிய செயற்திட்டத்திற்கு வேலைகளை முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |

**3.4 பெறுகைகள்**

-------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2019 கம்பெரலிய செயற்திட்டத்தின் கீழ் கிடைத்த ரூபா 9,199 தொகை செலவு செய்யப்பட்டு கடுவலகஸ்வெவ பிரதேச செயலகம், புத்தளம் - அனுராதபுரம் வீதியின் இருபக்கத்திலும் வடிகாண்களை நிர்மாணித்து துண்டுக்கற்கள் பிடிக்கப்பட்டிருந்ததுடன் ஒரே விடயத்திற்கு 06 செயற்திட்டங்களின் நிதி பயன்படுத்தப்பட்டது. அது கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்பாடுகள் அல்ல எனவும் நகரத்தை அலங்காரப்படுத்தல் நடவடிக்கை என்பதுவும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் குறைந்த கிரயத்தின் கீழ் உரிய செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு இருந்த சந்தர்ப்பம் தடுக்கப்பட்டிருந்தது என்பதுவும் அவதானிக்கப்பட்டது. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சினைப் பெற்று கொள்வனவு செய்தல் இடம்பெறுதல் வேண்டும். | பதில் கிடைக்கவில்லை. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மஹகும்புக்கடவல பிரதேச செயலகத்தின் குளாம் வாகனங்கள் மிகவும் உடைந்த நிலையில் காணப்படுவதுடன் அதனை முறைப்படியாக திருத்தம் செய்து ஓடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இடர் முகாமைத்துவ அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட உழவு இயந்திரமும் நீர் பவுசரும் முறைப்படியாக பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாததனால் விளைவற்று துருப்பிடித்துக் காணப்பட்டது. | அரசாங்கத்தின் ஆதனங்களை முறைப்படியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உழவு இயந்திர பவுசர்களின் இரண்டு தாங்கிகள் திறந்த வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டதானது அதனை நிறுத்தி வைப்பதற்கு பாதுகாப்பான இடம் இல்லாததினாலாகும். முன்னைய சந்தர்ப்பங்களில் வாகன தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்கு நிதி ஏற்பாடுகள் வேண்டப்பட்டிருந்தும் அமைச்சின் மூலம் அதற்காக இன்னும் நிதி ஏற்பாடு வழங்கப்படாததினால் திறந்த வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | இடர் முகாமைத்துவ அமைச்சின் மூலம் மாதம்பை பிரதேச செயலக அதிகாரப்பிரதேசத்தில் வறட்சியினால் இன்னல்களுக்கு உள்ளாகிய மக்களுக்கு நீர் வழங்குவதற்காக வழங்கப்பட்ட இரண்டு உழவு இயந்திரங்கள் 2019 சனவரியிலிருந்து செப்தெம்பர் மாதம் வரை எதுவித பயன்பாட்டிற்கும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்காததுடன் அந்த இரண்டு பவுசர்களும் பாதுகாப்பின்றி பிரதேச செயலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மேலும், மேற்கூறிய | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட 1000 லீற்றர் கொள்ளளவுள்ள 30 நீர்த்தாங்கிகளும் எதுவித பயன்பாட்டிற்கும் எடுத்துக் கொள்ளப்படாது பிரதேச செயலக வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | தேசிய இடர் நிவாரண சேவைகள் நிலையம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, இடர் முகாமைத்துவ நிலையம் என்பவற்றின் மூலம் வறட்சியினால் இன்னல்களுக்கு உள்ளாகிய மக்களுக்கு குடிநீரினைப் பகிர்ந்தளிப்பதற்காக வழங்கப்பட்ட உழவு இயந்திர பவுசர், லொறி பவுசர் என்பன முறையே 25, 09 மற்றும் 08 ஆக மொத்தம் 42 எண்ணிக்கையானவை வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த பவுசர்களை மாவட்ட செயலகம் பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிய வாகனங்களைப் பொறுப்பேற்று கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | புத்தளம் மாவட்ட செயலகத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள அனைத்து வாகனங்களும் 2020 ஆம் ஆண்டளவில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இடர் முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட வாகனங்கள் இதுவரை பொறுப்பேற்கப்படாததனால் கணக்கீடு செய்ய முடியாதுள்ளது எனத் தெரிவிக்கின்றேன். |
| (ஈ) | ஐந்து பிரதேச செயலகங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப் பகுதியாக எதுவித பயன்பாட்டிற்கும் எடுத்துக் கொள்ளப்படாத ரூபா 5,650,000 பெறுமதியான 11 வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு அல்லது ஏதாவது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதுவிடின் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தப்படாது காணப்பட்ட வாகனங்களைப் பொறுப்பேற்கும் நடவடிக்கைக்காக நிதி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (உ) மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான ரூபா 48,200,000 பெறுமதியான எட்டு உத்தியோகபூர்வ இல்லங்கள் பல ஆண்டுகளாக பயன்படுத்துவதற்குப் பொருத்தமற்று உடைந்த நிலையில் காணப்பட்டிருந்தும் அந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக அவை படிப்படியாக அழிவுக்கு உட்பட்டு விளைவற்றுக் காணப்பட்டது. | சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் உள்ளமை சம்பந்தமாக பொறுப்புக் கூறுதல் வேண்டும். | இக்கட்டிடத்தினை புனரமைப்புச் செய்தல் இலாபமற்ற விடயமாகும். எனவே அக்கட்டிடத்தைச் சுற்றி எல்லைச் சுவரினை நிர்மாணித்ததன் பின்னர் உரிய கட்டிடத்தை உடைத்து அகற்றுதல் பொருத்தமானதுடன் நிதி ஏற்பாட்டினைப் பெற்ற பின்னர் உடைத்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.6 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஆனமடுவ பிரதேச செயலகப் பிரிவில் கம்பெரலிய துரித நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராமிய வீதிகளுக்கு கிரவல் இட்டு அபிவிருத்தி செய்யும் போது கிரவலைப் பெற்றுக் கொள்ளுவது சம்பந்தமாக மிகை மதிப்பீடு தயாரித்ததன் காரணமாக 42 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,667,149 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | நிர்ணயிக்கப்பட்ட வேலை விடயங்களின் பிரகாரம் சரியாக பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரித்து கொடுப்பனவு செய்ய வேண்டியிருத்தல் மற்றும் தொழில்சார் கவனமின்றி பொறியியலாளர் மதிப்பீடு தயாரித்ததனால் இடம்பெற்றுள்ள முழுமையான நட்டத்தையும் பொறுப்பான தரப்பினரிடமிருந்து மீள அறவிடுதல் வேண்டும். | இது சம்பந்தமாகப் பரீட்சித்து அறிக்கையிடுவதற்கு என்னால் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்று பொறியியலாளரின் தலைமைத்துவத்தில் மூன்று நபர் புலனாய்வுக்குழு நியமிக்கப்பட்டது. அவ்வறிக்கை பெற்ற பின்னர் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.7 அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெறுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| அரசாங்கத்தின் நிதி மற்றும் பொருட்கள் சம்பந்தமான நடவடிக்கை மற்றும் நிருவாகரீதியான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அல்லது காசோலைகளில் கையொப்பமிடுகின்ற உத்தியோகத்தர் சுயமாக கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுகின்றார்கள் என்பதற்கு அரசாங்கத்தின் பிணை கட்டளைச் சட்டத்தில் காட்டப்பட்டவாறு பிணை வைப்புக்கள் செய்யப்பட வேண்டிய போதிலும், நவகத்தேகம மற்றும் மஹகும்புக்கடவெல பிரதேச செயலகங்களின் 28 உத்தியோகத்தர்கள் பிணைப் பணத்தை வைப்புச் செய்திருக்கவில்லை. | அரசாங்க உத்தியோகத் தர்களின் பிணை கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அத்தியாயத்தின் கீழ் பிணை வைப்புச் செய்யப்படல் வேண்டும். | உத்தியோகத்தர்களுக்கு பிணை வைக்குமாறு தெரிவித்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

### 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| கம்பெரலிய 2019 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாத்தாண்டிய பிரதேச செயலகப் பிரிவில் தும்மோதர முஸ்லிம் வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 970,000 பணத்தை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டது. எனினும், இந்த விளையாட்டு மைதானத்திற்கு அருகாமையில் பெரிய அளவான நீர் வடிந்தோடும் கால்வாய் அமைந்திருந்ததனால் மழை காலத்தில் கால்வாயில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு | செயற்திட்டத்திற்காக அரசாங்கத்தின் பணத்தை செலவு செய்யும் போது உச்ச அளவு பயன் பொதுமக்களுக்கு கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விளையாட்டு மைதானத்தின் முடிவில் அமைந்துள்ள கால்வாய்க்குச் சமாந்தரமாக கருங்கல் அத்திவாரம் போடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிதி ஏற்பாட்டினை வழங்கி அக்கருங்கல் அத்திவாரத்தினை சில மட்டத்திற்கு உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதனால் மண் அடித்துச் செல்வதனை இதன் மூலம் தடுக்க முடியும். |

அல்லது ஈடுபடுத்தப்பட்ட கிரவல் அடித்துச் செல்லப்படுவதனைத் தவிர்ப்பதற்கு முடியாததனால் மேற்கூறிய செயற்திட்டம் விளைவற்ற ஒரு செயற்திட்டமாக அவதானிக்கப்பட்டது.

## 3.9 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நவகத்தேகம பிரதேச செயலகத்தின் குளாம் வாகனங்கள் 2013 மார்ச் 16 ஆந் திகதியிலிருந்து வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாது செயற்பட்டு வருகின்றது. | வாகன அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுதல் கட்டாய செயற்பாடாகக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வாகனத்திற்கு புதிய இன்ஜினை வைத்தல் இடம்பெற்றிருந்தும் அதற்காக வாகனத்தை பதிவு செய்யும் சான்றிதழ் திருத்தம் செய்யப்படாததனால் புகைப் பரிசோதனைச் சான்றிதழ் பெற்றுக் கொள்ள முடியாததனால் வருமான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. |
| (ஆ) | இங்கினிமிடிய செயற்திட்டத்தின் கீழ் காணிகளைப் பொறுப்பேற்பதற்காக இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு கிடைத்த ரூபா 4,987,137 பணம் பொது வைப்புக் கணக்கில் பல ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதேபோல இழப்பீட்டினைப் பெறுபவர்களின் கோவைகளிலும் நடவடிக்கை முடிவடைந்திருந்தும் இழப்பீட்டினைச் செலுத்தும் நடவடிக்கையானது பிற்போடப்பட்டுள்ளது. | கோவைகளில் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டதன்பின் னர் இந்த இழப்பீட்டுப் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக காணி அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் ஆலோசனை வேண்டப்பட்டிருந்தும் தற்பொழுது வரை அதற்காக ஆலோசனை கிடைத்திருக்கவில்லை. ஆலோசனை பெற்றதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கும் வரை ரூபா நாற்பத்து ஒன்பது இலட்சத்து எண்பத்து ஏழாயிரத்து நூற்று முப்பத்து ஏழு பணம் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என தயாவாகக் குறிப்பிடுகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெற்று மீண்டும் சம்பளம் பெறுகின்ற ஒரு சேவையில் சேர்ந்து சம்பளம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் அச்சம்பளத்துடன் செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படியினை மீண்டும் செலுத்தாதிருத்தல் வேண்டுமென காட்டப்பட்டிருந்தும் நவகத்தேகம பிரதேச செயலகத்தின் ஓய்வுபெற்ற 05 உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 242,838 தொகையான வாழ்க்கைச் செலவுப் படிகள் முழுமையாக மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேலதிகமாகச் செலுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி அறவிடப்படுதல் வேண்டும். | வாழ்க்கைச் செலவுப் படியுடன் அரசாங்கத்திடம் சம்பளம் பெறுகின்ற 05 ஓய்வூதியக்காரர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படியான ரூபா 741,098.00 செலுத்தப்பட்டது. அத்தவறு இனங்காணப்பட்டதன் பின்னர் அந்த உத்தியோகத்தர் களிடமிருந்து அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை ரூபா 242,838, அறவீடு செய்ய வேண்டியிருந்ததுடன் 2020 ஆகஸ்ட் மாதமளவில் ரூபா 150,198 அறவீடு செய்ய வேண்டியிருந்தது. அதற்கிணங்க, மேலதிகக் கொடுப்பனவுகளை தவணை அடிப்படையில் ஓய்வூதியத்திலிருந்து அறவீடு செயவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | பொதுமக்களின் தேவைப்பாட்டிற்காக அரசாங்கத்திற்கு தனியார் காணிகளை பொறுப்பேற்கும் நடைமுறை பிரதேச செயலாளரினால் அமுல்படுத்தப்பட வேண்டிய போதிலும், 04 சந்தர்ப்பங்களின் போது சிலாபம் பிரதேச செயலாளருக்கு முன் வைக்கப்பட்ட காணிகளைச் சுவீகரிக்கும் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு 08-24 ஆண்டுகள் வரையான காலப்பகுதி எடுத்திருக்கும் வரை காணிகள் பொறுப்பேற்கப்படாமையின் காரணமாக இழப்பீடுகளுக்கு மேலதிகமாக வட்டியையும் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | சுவீகரிக்கும் நடைமுறையினை விரைவாக முடிவுறுத்துதல் வேண்டும். | காணிகளைச் சுவீகரித்தல் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறுத்தும் வரை வழக்கம் போல இடம்பெற்றிருந்தும் சில ஆண்டுகள் எடுக்கும் செயற்பாடாகும். பல்வேறு நபர்களும் பல நிறுவனங்களும் சம்பந்தப்படுவதனால் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு பிரதேச செயலாளர் மாத்திரம் செயற்படுவது சிக்கலானதாகும். எவ்வாறாயினும், சுவீகரிக்கும் நடைமுறையின் போது சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்வதுடன் உரிய |

| | | | |
|---|---|---|---|
| | | | அனைத்து நிறுவனங்களையும் தொடர்புபடுத்தி இச்செயற்பாடுகளை விரைவுபடுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | தங்கொடுவ பிரதேச செயலகத்தின் மூலம் கிரவல் மற்றும் களிமண் வெட்டும் நடவடிக்கைக்காக பிரதேச செயலாளரினால் 03 அனுமதிப்பத்திரங்களுக்காக சிபார்சுகள் வழங்கப்பட்டிருந்தும் அவற்றிற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதா என்பது பிரதேச செயலாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்க வில்லை. எனவே, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் தோண்டுதல் பணியகத்துடன் பரஸ்பர தொடர்புகள் இல்லாதிருந்ததுடன் இதன் காரணமாக சட்ட விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் தோண்டுதல் பணியகத்தின் மூலம் வழங்கப்படுகின்ற உத்தரவுப் பத்திரம் சம்பந்தமாக பிரதேச செயலாளருக்குத் தெரியப் படுத்துவதற்கு வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |
| (ஊ) | மஹகும்புக்கடவல பிரதேச செயலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு சேவையாற்றிய கிராம உத்தியோகத்தர் இலஞ்சம் பெற்றுக் கொண்டதன் காரணமாக சேவையை கைவிட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 27.11 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்கள விசாரணையானது தனியாக நடாத்தப்பட்டு பிழை அல்லது சரி நிர்ணயிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திணைக்கள விசாரணையை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | கருவலகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 609 ஏ புபுதுகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் பீ.பீ.பு 5813 இல் காணித்துண்டு இலக்கம் 01 இல் 0.5813 ஹெக்டயர் காணி குடியிருக்கும் செயற்பாட்டிற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 189,730 நிலுவைக் குத்தகைப் பணத்தை செலுத்த வேண்டி இருந்தது. குத்தகைப் பணத்தை செலுத்தத் தவறுதல் சம்பந்தமாக குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிட்ட நிபந்தனையின் பிரகாரம் காணிக்குரிய குத்தகையை முடிவுறுத்துவதற்கு பொறுப்பான பிரிவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிய குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஏ) | 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிய வளங்கள் அதிகாரச்சட்டத்தின் கீழ் மண், கிரவல் மற்றும் மணல் தோண்டி எடுப்பதற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அதிகாரம் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் மூலம் இடம்பெறுவதுடன் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு முன்னர் கருவலகஸ்வெவ பிரதேச செயலாளர் சிபார்சு செய்யாத சந்தர்ப்பத்தில் பல்வேறு நிறுவனங்களின் அங்கீகாரத்தின் கீழ் மண் கிரவல், மணல் என்பன சட்டவிரோதமாக தோண்டி எடுத்தல் இடம்பெற்றிருந்தது. | சட்டவிரோதமாக இடம்பெறும் மண் கிரவல், மணல் என்பன தோண்டி எடுக்கும் நடவடிக்கையைக் கட்டுப் படுத்துவதற்காக புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் மூலம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக பிரதேச செயலாளருக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தினால் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களுக்கான இலக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான குறிக்கோள்களுக் குரிய இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஆ) | மாவட்ட செயலகத்தினால் இனங்காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் அதற்கிணங்க தயாரிக்கப்பட்ட இலக்குகள் நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | நிலைபேறான குறிக்கோள்களும் இலக்குகளும் நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | பதில் கிடைக்கவில்லை. |
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் போது உரிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக தேவையான நிலைகள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக உரிய செயற்பாடுகளை ஒழுங்கு படுத்துவதற்குத் தேவையான மைய நிலைகள் இனங்காணப்படுதல் வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

5. **நல்லாட்சி**

-----------------

5. **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 41 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2016 சனவரி 28 ஆந் திகதிய DMA/2009(I)(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டில் ஆகக் குறைந்தது ஒரு கூட்டம் வீதம் 04 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஆண்டின் போது நடாத்தப்பட வேண்டும். எனினும், கருவலகஸ்வெவ மாதம்மை, முந்தல், ஆராய்ச்சிக்கட்டுவ, மஹகும்புக்கடவல, புத்தளம், தங்கொட்டுவ, வண்ணாத்திவில்லு, நவகத்தேகம ஆகிய பிரதேச செயலகங்களில் இரண்டு கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டதுடன் நாத்தாண்டி, கல்பிட்டி, சிலாபம், மஹவெவ ஆகிய பிரதேச செயலகங்களில் மூன்று கூட்டங்கள் வீதம் நடாத்தப்பட்டன. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 41 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்று வதற்காக 2016 சனவரி 28 ஆந் திகதிய DMA/2009)(I)(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டங்களை நடாத்துதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

6. **மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தில் மற்றும் 16 பிரதேச செயலனங்களில் சிரேஸ்ட மட்டத்திலுள்ள பதவிகளில் 08 வெற்றிடங்கள், மூன்றாம் மட்டத்தில் 20 வெற்றிடங்கள், இரண்டாம் மட்டத்தில் 259 வெற்றிடங்கள், மற்றும் ஆரம்ப மட்டத்தில் 32 வெற்றிடங்கள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் காணப்பட்டது. சிரேஷ்ட | அத்தியாவசியமான வெற்றிடமாகவுள்ள பதவிகளை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதவியணியினர் அறிக்கை மூலம் வெற்றிடம் தெரிவிக்கப்பட்டது. |

மட்டத்திலுள்ள 06 வெற்றிடங்களுள் மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) உதவிப் பணிப்பாளர் (திட்டங்கள்) 04 பதவிகள் வீதமும், 03 உதவிச் செயலாளர் பதவிகள், 02 கணக்காளர் பதவிகள் காணப்பட்டன என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அங்கீகரித்த 34 பதவிகளில் 22 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் தொழில்நுட்ப உதவியாளரின் அங்கீகரித்த 18 பதவிகளில் 13 வெற்றிடங்கள் காணப்பட்டன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளரின் அங்கீகரித்த 17 பதவிகளில் 12 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. சிரேஷ்ட மட்டத்தில் வெற்றிடங்கள் காணப்படுவதனால் பொதுமக்கள் சேவையை தொடர்ச்சியாகவும் ஆக்கபூர்வமாகவும் நிறைவேற்றுவதற்காக அதிக தாக்கம் ஏற்படுவதனை தவிர்க்க முடியாமைக்கு காரணமாக இருந்தது. தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளரின் வெற்றிடங்களின் காரணமாக நிர்மாண செயற்திட்டங்கள் உள்ளடங்கலாக அபிவிருத்தி நடவடிக்கைகளின் விளைதிறன் மற்றும் தரங்கள் கீழ் மட்டத்தில் காணப்படுவதற்கு காரணமாக இருந்தது. 16 பிரதேச செயலங்களுக்கு ஒரு தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் வீதம் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 04 பிரதேச செயலகங்களில் மாத்திரம் இப்பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 12 அலுவலகங்களில் இந்த உத்தியோகத்தர்கள் வெற்றிடமாகக் காணப்பட்டன. மாவட்ட செயலகத்தில் மற்றும் பிரதேச செயலகங்களில் இணையத்தளங்களை செயற்படும்

நிலையில் பேணுதல் இந்த உத்தியோகத்தர்களின் கடமையாவதுடன் வெற்றிடங்கள் காணப்படுகின்ற அலுவலகங்களில் அக்கடமை நடவடிக்கைகளுக்காக அனுபவமில்லாத ஏனைய உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் அந்த நடவடிக்கை முறைப்படியாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.